RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# வேள்பாரி புதினத்தில் அகுதை குலம் - சங்க இலக்கிய ஒப்பீடு

ர.காயத்திரி [அ *], ஆ. மகாலட்சுமி [அ]

[அ] தமிழ்த்துறை, நல்ல முத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி பொள்ளாச்சி-642001 தமிழ் நாடு இந்தியா,

# The Aguthai Clan in Velpari and Sangam Literature: A Comparative Analysis

**R.Gayathri [a, *], A. Mahalakshmi [a]**

[a] Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi- 642001, Tamil Nadu, India

*Corresponding Author:

**ABSTRACT**

Early human communities lived in close harmony with nature, relying on it for food, shelter, and survival. Initially, individuals depended on hunting as their primary means of subsistence. As human society evolved, people gradually formed organized hunting communities and later established settlements based on fertile lands, where agriculture became the principal means of meeting their nutritional needs. Within these communities, individuals who possessed exceptional leadership qualities emerged as clan leaders. Living amidst the uncertainties of nature and the constant threats posed by wild animals, these early societies developed systems of belief, worship, rituals, and performative traditions to strengthen social cohesion and ensure collective well-being. Over time, these practices evolved into enduring cultural traditions and artistic expressions. Sangam literature provides valuable historical and cultural evidence regarding the organization, customs, and identities of ancient Tamil clans. Drawing extensively upon these classical sources, the historical novel Velpari reconstructs the socio-cultural landscape of the Sangam age by portraying several clans and their distinctive characteristics. Among them, the Aguthai clan occupies a significant place, reflecting the traditions, social organization, and cultural identity of early Tamil society. By integrating historical imagination with literary evidence, Velpari establishes meaningful parallels between fictional narrative and Sangam literary traditions. The novel presents clan life not merely as a historical reconstruction but as a reflection of the social values, belief systems, and cultural continuity of the ancient Tamils. This article examines the portrayal of the Aguthai clan in Velpari through a comparative analysis with references found in Sangam literature. The study explores the clan's social structure, cultural practices, and historical significance, demonstrating how the novel successfully draws upon Sangam literary traditions to recreate the life and identity of ancient Tamil clan-based communities.

**Keywords:** Sangam Literature, Aguthai Clan, Velpari Novel, Cultural Continuity

## முன்னுரை

ஆதி மனிதர்கள் தொடக்க காலத்தில் இயற்கையை மையமாகக் கொண்டு உணவிற்காகவும் உறைவிடத்திற்காகவும் வாழ்ந்து வந்தனர். தனிமனிதனாக வேட்டை தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் பின்பு குழுவாக இணைந்து வேட்டை சமூகத்தில் ஈடுபட்டனர் .இதன் தொடர்ச்சியாக நிலங்கள் சார்ந்து குழு அமைத்து விளைச்சலில் ஈடுபட்டு உணவின் தேவைகளை பூர்த்தி செய்தனர் குழுவாக அமைந்த மனிதர்களில் சிறந்தவன் இனக்குழு தலைவனாக கருதப்பட்டான் இயற்கையை சார்ந்து வாழ்ந்த மனிதன் இயற்கையின் சீற்றங்களாலும் மிருகங்களின் அச்சுறுத்தல்களாலும் பாதிப்பிற்கு உள்ளானான். இதனை எதிர்கொள்வதற்கு ஒவ்வொரு இனக் குழுவிற்கும் நம்பிக்கைகள் வழிபாடுகள் கூத்துகள்

போன்றவற்றை உருவாக்கினர். இவையே காலப்போக்கில் பண்பாடுகளாகவும் கலைகளாகவும் வளர்ச்சி அடைந்தன என்பதை அறிய முடிகிறது. இக்கட்டுரையில் சங்க இலக்கியத்தை முதன்மை ஆதாரமாகக் கொண்ட வேள்பாரி புதினத்தில் உள்ள சில குலங்களையும் அவற்றின் இயல்புகளையும் வெளிப்படுத்துவதாக அமைகிறது.

## நிலம் சார்ந்த இனக்குழுக்கள்

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பின் அடிப்படையில் தங்கள் வாழ்வியல் தேவைகளை சார்ந்து வாழ்ந்து வாழ்ந்த சமூகத்தை இனக்குழு சமூகம் என்பார். தொழில்களின் அடிப்படையில் இடங்களில் ஐந்திணைகளாக பிரித்து இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்து வந்தனர். "சமூக மானிடவியல் ஆய்வுகள் வழி உணவு சேகரிப்பு நிலை சமூகம் வேட்டை சமூகமும் ஆநிரை மேய்ப்போர் சமூகமும் இன குழு வாழ்க்கை முறையிருந்தன .அக்குழுக்கள் தலைவர் இருந்தனர் ஆநிரை உடைமைச் சமூகத்திற்கு அடுத்த மனிதநேய வேளாண்மை சமூகத்தில் வள்ளல்கள் என படிப்படியாக அரசு உருவாக்கம் அடைந்தது என்பதை அறிய முடிகிறது. வேளாண்மை சமூகத்தில் இனக்குழுவாக ஈடுபட்டு தொழில் செய்த மக்கள் காலப்போக்கில் கால்நடைகளை வளர்க்க தொடங்கினர் ஆதி காலத்தில் கால்நடைகளை பெரும் செல்வமாக இருந்தன".(சங்ககால இனக்குழு சமூகம் ப :62) இதனை அடுத்து விளைநிலங்களில் இருந்தன இதன் மேல் பற்று கொண்டு அழித்து ஒழித்து மேல் எழுந்தவர்கள் வேந்தர்கள் எனவும் இவர்களை ஆதரித்தவர்கள் குறுநில மன்னர்களாகவும் சிற்றரசர்களாகவும் வளர்ச்சி அடைந்து மக்களை ஆதரித்தனர். சங்ககாலத்தில் சிறுகுடி மன்னரான அகுதை என்பவரும் வேளாண் தொழில் செய்து வேளாண் அறிவு நுட்பங்களை உணர்ந்து வேளாண்மை செய்து பிற குலங்களுக்கும் முன்னோடியாக வாழ்ந்தனர் என்பதை வேள்பாரி புதினம் புலப்படுத்துகிறது . வேளாண்மை செய்தவர்கள் வேளாளர் மற்றும் பள்ளர் என்பதை அக்காலங்களில் வாழ்ந்து வந்த குலங்களின் எச்சங்களாக இன்றும் உள்ளதை காண முடிகிறது.

## அகுதை குலம்

அகுதை என்பவர் மாவீரர் கூடல் நகையை ஆட்சி செய்த மன்னரும் ஆவார் இவர் வள்ளல் தன்மையுடன் வாழ்ந்து வந்ததை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

பொய்யாகியரோ பொய்யாகியரோ

பா அடி யானை பாசிலர்க்கு அருகாச்

சீர் கெழு நோன்தாள் அகுதைகள் தோன்றிய( புறம் பா :233)

இவ்வடிகளின் வாயிலாக பரந்த அடியை உடைய யானையினை பரிசீலர்க்கு மிகுதியாக தரும் பண்பை உடையவனாக இருந்தனர் என்பதை அறிய முடிகிறது. வேள்பாரி புதினத்தில் சு வெங்கடேசன் அவர்கள் அகுதை குலத்தின் வேளாண்மை அறிவையும் பண்பாடுகளையும் வெளிப்படுத்தி காட்டுகிறார்

## வேளாண் அறிவு

வைகைக் கரையில் செழித்து வளர்ந்த வேளாண்மை ஒரு திடமான நாகரீகம் அல்லது அடிகோலியது ஆற்றங்கரையின் நிலத்திற்கு ஏற்றவாறு பயிர்களை விளைய வைக்கவும் அறுவடை செய்யவும் வேளாண்மையின் ஆதி நுட்பங்களை கண்டறிந்தவர்கள் தாவரங்களின் வேர்கள் எந்த வகையான மண் உள்நோக்கி செல்ல அனுமதிக்கும் எந்த வகை மண் விட்டு தரும் என்று நன்றாக அறிந்தவர்கள் கூடல் என மக்களாகவர்

## நன்றி செலுத்துதல்

நன்றி செலுத்தும் பண்பானது காலம் காலமாக தமிழர்களின் பண்பாட்டில் உள்ளது. அகுதை குலவாசிகள் பறவைகள் கழிவில் இருந்து முளைத்துவிடும் தானிய மணிகளை எவை என்பதை பற்றிய அறிவு சேகரம் உடையவர்கள் முதல் விதை நடும்போது அந்த பறவையின் சிறகை அப்பயிரின் அருகில் நட்டு தங்களுக்கு வழிகாட்டியாக திகழும் பறவைகளுக்கு நன்றி கூறுகின்ற மரபு உடையவர்கள். பறவைகளே ஆசனாக கருதுவர். வழிபடுவர். பறவைகள் உண்ட பயிர்களின் மிச்சங்களை தனதாக்கிய அறம் கொண்டு நன்றி மறவாமல் வாழ்ந்து வந்தவர்கள் என்று வேள்பாரி புதினம் கூறுகிறது.

பழங்கால சமூகத்தின் மையமாக வழிபாடுகள் மீதும் அறத்தின் மீதும் நம்பிக்கை வைத்து அவர்களுக்கு நன்றி செலுத்தி வாழ்ந்து வந்தனர் இதனை வள்ளுவர்

‘எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்நன்றி கொன்ற மகற்கு’

என்று கூறுகிறார் வேளாண்மை செய்த மக்கள் பறவைகளுக்கு நன்றி உணர்வோடு மட்டுமல்லாமல் ஆசானாக வழிபட்டு கடமைப்பட்டு வாழ்ந்தது அறிய முடிகிறது

## வேளாண் தொழிலை கையாளுதல்

தொழில்களில் முதன்மையானது உழவுத் தொழிலாகும். இதனை வள்ளுவர் உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்று கூறியுள்ளார். தொழில் செய்வதற்கு முதன்மையானது அவற்றை பற்றிய தகவல்களை சேகரித்து அறிவை விரிவு செய்வது ஆனால் கூடல்வாசிகளுக்கு இந்த அறிவு இயற்கையாகவே அமைந்திருந்தது. வேளாண் அறிவின் நுட்பத்தை கண்டறிவது மட்டுமல்லாமல் செயல்படுத்தியும் காட்டினார். அவரை செடியானது இயல்பாகவே சாலையோரங்களில் வளரக்கூடியது. ஆனால் ஆவார இலையை மண்ணுள் புதைத்து விளைச்சலை பல மடங்கு பெருக்கினார்கள். இவர்கள் உழுவதற்கான மரங்களை தன்மையையும் அறிந்திருந்தனர்

## ஆவினத்தின் குறுக்கு ஆரம்

சங்ககால மக்கள் ஏர் கலப்பையின் குறுக்கு ஆரத்தை கனமான மரங்களை செய்வர் ஆனால் ஆவுக்கு அது பாரமாக இருக்கும் என்பதை அவர்கள் உணரவில்லை. ஆனால் தகுதியின் குலம் தான் முதன் முதலில் அத்தி மரம்தான் ஆவிணத்தின் சேர்மானம் என்று குறுக்கு ஆரத்தை அத்தி மரத்தில் செய்தனர். கனம் குறைவாகவும் எவ்வளவு எழுத்தாலும் மாட்டின் கழுத்து பகுதியில் வடு பிடிக்காது என்றும் பயன்படுத்தி உள்ளனர். இவர்கள் உயிர்மெய் நேயம் உடையவர்களாக அனைத்து உயிர்களின் உணர்வுகளையும் மதித்து வாழ்ந்து வந்தனர் என்பது வெளிப்படுகிறது.

## புலனாட்டு விழா

புலனாட்டு விழா என்பது ஒருவரை ஒருவர் நீரால் அடித்து விளையாடுவதாகும் விழாவில் கூடல்வாசிகள் முழுமையாக இணைந்து இருப்பார். தலைமக்கள் நீரால் ஒருவரை ஒருவர் அடித்து விளையாடுவார் இவ்வகையில் துணை கூத்தும் ஒன்றாகும் வேள்பாரி புதினத்தில் நாகக்குடிகளின் விழாவாக கைப்புணர்ந்தாடும் துணங்கை ஆட்டம் ஆடுவர் அதில் புது இணையர்கள் தீக்களியை பூசிக்கொண்டு முகம் மறைத்து நெருப்பில் இறங்கி ஆடுவர்.

"துணங்கையில் மகளிர் மட்டுமே ஆட வேண்டும் என்ற வரையறை இருந்தது மகளிர் ரோடு ஆட விரும்பியவர்கள் தம் உருவை மறைத்துக் கொண்டு மகளிரை போல உருப்புனைந்து கொண்ட ஆடினர்"(காலந்தோறும் தமிழர் கலைகள் ப;73)

தங்கள் இணையே தேர்ந்தெடுக்கும் உரிமை பிறப்பிலிருந்து இருப்பதை அறிய முடிகிறது அவர்களை தங்கள் இன மக்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே இனம் சார்ந்த பண்பாடு கூத்துக்களாகவும் விழாவாகவும் கொண்டாடி வருகின்றனர் இவ்வினங்களின் எச்சங்களாக இனக்குழு மக்கள் இவ்வகை ஆட்டங்களில் இனக்குழு இனக்குழு தலைவன் மற்றும் தலைவியையும் இணைந்தாடும் முறையையும் நீலகிரி மலையின் மக்களிடையே மேற்கு தொடர்ச்சி மலையின் மக்களிடத்திலும் இருப்பதை கண்டு ரசிக்க முடியும் என்பதில் வாயிலாக அக்கால சமூகத்தில் ஒவ்வொரு இன குழுவும் அவைகளின் பண்பாடுகள் அடிப்படையில் இதனை வெளிப்படுத்தி இருக்கின்றனர்.

## அசுணமா

அசுணமா என்பது இசைக்கு மயங்கும் உயிரினம் இது விலங்காக அல்லது பறவையாக இருக்கக்கூடும் என்பது இலக்கியங்களில் வாயிலாக அறிய முடிகிறது .இதனை வேட்டையாடுவதற்கு யாழ் கொண்டு இசையை மீட்டுவர் அசுணமா மயங்கி விழும்போது கொன்றுவிடுவார் என்பதை

'அசுணம் கொள்பவர் கைபோல் நன்றும்

இன்பமும் துன்பமும் உடைத்தே '

(நற்றிணைபா: 304)

இவ்வடிகளில் அசுணமா பறையிலிருந்து இசை வரும்போது அதன் ஒலி தாங்காமல் இறந்து விடும் என்பதை வெளிப்படுத்துகிறது.கூடல்வாசிகளின் குலப்பறவை அசுணமா. மரக்கிளையால் செய்யப்பட்ட யாழையே கூடல்வாசிகள் மீட்டுவார் ஏனெனில் இது கொன்றை மரத்தில் மட்டுமே அடையக்கூடிய பறவையாகும் கொன்றை மரத்தின் யாழ் செய்யும்போது யாழின் தன்மை கடினமானதாக இல்லாமல் இலகுவாக இருக்கும் அசுணமா மென்மையான ஒலிக்கு மட்டுமே மயங்கும் பறவை அதனால் கூடல்வாசிகள் கொன்றை மரத்தில் யாழ் செய்து குலப்பறவையை மகிழ்ச்சி அடையச் செய்தனர். வள்ளி முருகன் காதல் கதைகளில் முருகன் நீண்ட கொன்றைக்காயின் விதைகளை ஒரு பக்கம் துளைவிட்டு எடுத்துவிட்டு இசைப்பாடும் குழலாக மாற்றினான். கொன்றை மரமானது இசையை உருவாக்குவதற்கு தகுந்த கருவியாக அகுதை குல மக்களும் சங்ககால மக்களும் அறிந்திருந்தனர் மேலும் இசையை மகிழ்ச்சியின் குறியீடாக பயன்படுத்தி வாழ்ந்தனர் என்பது புலனாகிறது.

## முடிவுரை

இனக்குழுவில் தொடங்கிய பண்பாடுகள் வழிமுறைகளை அகுதை குலத்தின் ஒரு அங்கமாக காணப்படுகிறது காலங்கள் கடந்தும் வேளாண் தொழிலில் செய்தவர்களும் உள்நாட்டு விழா நடைபெறுவதும் பறவைகளை வழிபடுவதையும் இன்றும் எச்சங்களாக நாம் பயன்படுத்தியும் நன்றி தெரிவித்தும் வருகிறோம் என்பதை கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது மேலும் வேளாண் அறிவின் நுட்பங்களை அகுதை குலத்தின் வாயிலாக நாம் அறிய முடிகிறது

## References

எ.ஃப் பாக்கியமேரி (2008) காலந்தோறும் தமிழர் கலைகள், அறிவு பதிப்பகம், சென்னை

கிரிஜா, (2024) சங்க கால இனக்குழு சமூகம், இமாகுலேட் மகளிர் கல்லூரி, கடலூர் .

கு. மோகனராசு, திருக்குறள் மக்கள் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை

கு.வெ. பாலசுப்பிரமணியம், (2004) நற்றிணை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

கு.வெ. பாலசுப்பிரமணியம், (2004) புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

சாமிநாத ஐயர், உ.வே. (2018) குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம், சென்னை

சு. வெங்கடேசன் (2018) வீரயுக நாயகன் வேள்பாரி, தொகுதி -1

பக்தவச்சலபாரதி, (1990) பண்பாட்டு மானுடவியல், பாரதி மணிவாசகர் பதிப்பகம், சென்னை

புலியூர்க் கேசிகன், (2010) நற்றிணை தெளிவுரை, கங்கை புத்தக நிலையம், சென்னை

வரதராசனார், மு. (2014), திருக்குறள் தெளிவுரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

வேங்கடசாமி நாட்டார், ந.மு. (2008), அகநானூறு - நித்திலக்கோவை, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License